உ

கணபதிதுணை.

குமரகுருபரசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

மதுரை

அங்கயற்கண்ணம்மை என்னும்

மீனாக்ஷியம்மை

பிள்ளைத்தமிழ்

மூலபாடம்.

௫-ம் பதிப்பு.

சென்னபட்டணம்

ஊ. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரால்

கலாரத்நாகரம் என்னும்

தமது அச்சுக்கூடத்திற் பதிப்பித்து

பிரசுரிக்கப்பட்டது.

1911.

12 . 600

பெண்பாற் பிள்ளைக்கவி.

சாற்றரிய காப்புசெங் கீரைதால் சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானைப் - போற்றரிய
அம்புலியே யம்மனையே யார்ந்தபுது நீராட்டே
பம்புதிரு வூசலொடும் பத்து.

உ

கணபதிதுணை.

மதுரை

மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்.

விநாயகக்கடவுள்.

கார்கொண்ட கவுண்மதக் கடைவெள்ள முங்கட்
கடைக்கடைக் கனலு மெல்லை, கடவாது தடவுக்
குழைச்செவி முகந்தெறி கடைக்கா றிரட்ட வெங்
கோன்,

போர்கொண்ட வெண்டோட் பொலன்குவடு பொ
தியும்வெண் பொடிதுடி யடித்து வைத்துப், புழு
தியாட் டயராவொ ரயிராவ ணத்துலவு போர்க்
களிற் றைத்து திப்பாம்,

தார்கொண்ட மதிமுடி யொருத்தன் றிருக்கண்மலர்
சாத்தக் கிளர்ந்து பொங்கித், தவழுமிள வெயிலு
மழ நிலவுமள வளவலாற் றண்ணென்று வெச்செ
ன்றுபொன்,

வார்கொண் டணிந்தமுலை மலைவல்லி கர்ப்பூர வல்லி
யபி ராம வல்லி, மாணிக்க வல்லிமர கதவல்லி
யபிடேக வல்லிசொற் றமிழ் தழையவே.

காப்புப்பருவம்.

திருமால்.

மணிகொண்ட நெடுநேமி வலயஞ் சுமந்தாற்று மா
சுணச் சூட்டு மோட்டு, மால்களிறு பிடர்வைத்த
வளரொளி விமானத்து வாலுளைமடங்க லுங்கும்,
அணிகொண்ட பீடிகையி னம்பொன்முடி முடிவை
த்தெ மையனொடு வீற்றிருந்த, வங்கயற் கண்ண
முதை மங்கையர்க் கரசியையெ மம்மனையை
யினிது காக்க,
கணிகொண்ட தண்டுழாய்க் காடலைத் தோடுதேங்
கலுழிபாய்ந் தளறு செய்யக், கழனிபடு நடவை
யிற் கமலத் தணங்கரசொர் கையணை முகந்து
செல்லப்,
பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப்
பணைத்தோ ளெருத்த லைப்பப், பழமறைகண்
முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்
பசுங் கொண்டலே. (க)

பரமசிவன்.

வேறு.

சிகர வடவரை குனிய நிமிர்தரு செருவி லொரு
பொரு வில்லெனக் கோட்டினர், செடிகொள் பறி
தலை யமண ரெதிரெதிர் செலவொர் மதலைசொல்
வைகையிற் கூட்டினர், திருவு மிமையவர் தருவு
மரவொலி செயவ லவர்கொள நல்குகைத் தீட்
டினர், சிறிய வெனதுபுன் மொழியும் வடதமிழ்
தெரியு மவர்முது சொல்லெனச் சூட்டினர்.

பகரு மிசைதிசை பரவ விருவர்கள் பயிலு மியனெறி
வெள்வளைத் தோட்டினர், பசிய வறுகொடு வெ
ளிய நிலவிரி பவள வனமடர் பல்சடைக் காட்
டினர், பதும முதல்வனு மெழுத வரியதொர்
பனுவ லெழுதிய வவதிகப் பாட்டினர், பரசு மிர
சித சபையி னடமிடு பரத பதயுக முள்ளம்வைத்
தேத்துதும்,

தகர மொழுகிய குழலு நிலவுமிழ் தரள நகையுமெ
மையனைப் பார்த்தெதிர், சருவி யமர்பொரு விழியு
மறுகிடை தளர வளர்வதொர் செவ்விமுற்றுறுக்கன,
தனமு மனனுற வெழுதி யெழுதரு தமது வடி
வையு மெள்ளிமட் டேற்றிய, தவள மலர்வரு மிளமி
ஞெடுசத தளமின் வழிபடு தையலைத் தூத்திரை,

மகர மெறிகட லமுதை யமுதுகு மழலை பழகிய
கிள்ளையைப் பேட்டன, மடவ நடைபயில் பிடி
யை விரைசெறி வரைசெய் புயமிசை வையம்
வைத் தாற்றிய, வழுதி யுடையகண் மணியொ டில
வுபெண் மணியை யணிதிகழ் செல்வியைத் தேக்
கமழ், மதுர மொழுகிய தமிழி னியல்பயின்
மதுரை மரகத வல்லியைக் காக்கவே. (௨)

சித்திவிநாயகன்.

வேறு.

கைத்தல மோடிரு கரடக் கரைத்திரை
கக்குக டாமுடைக் கடலிற் குளித்தெமர்
சித்தம தாமொரு தறியிற் றுவக்குறு
சித்திவி நாயக னிசையைப் பழிச்சுதும்
புத்தமு தேர்வரு டைமையைத் தழைத்ததொர்
பொற்கொடி யோவென மதுரித் துவட்டெழு

முத்தமிழ் தேர்தரு மதுரைத் தலத்துறை
முத்தனை மேவுபெ ணரசைப் புரக்கவே. (௩)

முருகவேள்.

வேறு.

பமர மடுப்பக் கடாமெடுத் தூற்றுமோர் பகடு நடத்திப் புலோமசைச் சூர்ப்புயல், பருகி யிடக்கற் பகாடவிப் பாற்பொலி பரவை யிடைப்பத் மமாதெனத் தோற்றிய,

குமரி யிருக்கக் கலாமயிற் கூத்தயர் குளிர்புன மொய்த்திட் டசாரலிற் போய்ச்சிறு, குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு குமரனை முத்துக் குமரனைப் போற்றுதும்,

இமிழ்திரை முற்றத் துமேருமத் தார்த்துமுள் ளெயிறுகு நச்சுப் பணுடவித் தாப்பிசைத், திறுக விறுக்கித் துழாய்முடித் தீர்த்தனொ டெவருமதித்துப் பராபவத் தீச்சுட,

அமுதுசெய் வித்திட் டபோனகத் தாற்சுட ரடருமிருட்டுக் கிரீவமட் டாக்கிய, வழகியசொக்கற் குமால்செயத் தோட்டிக லமர்செய் கயற்கட் குமாரியைக் காக்கவே. (௪)

நான்முகன்.

வேறு.

மேகப் பசுங்குழவி வாய்மடுத் துண்ணவும் விட்புலம் விருந் தயரவும், வெள்ளமுதம் வீசுங் கருங்திரைப் பைங்துகில் விரித்துடுத் துத்தி விரியும்,

நாகத்து மீச்சுடிகை நடுவட் கிடந்தமட நங்கையைப் பெற்று மற்றங், நாகணைத் துஞ்சுதன் றந்தைக்கு வந்துதவு நளினக் குழந்தை காக்க,

யாகத்து மரகதக் குன்றொன்றோர் தமனியக் குன்
றொடு கிளைத்து நின்ற, பவளத் தடங்குன் றனைக்
கண்ண தென்றப் பரஞ்சுடர் முடிக்கு முடிமூன்,

றாகத் தமைத்துப்பி னொருமுடிதன் முடிவைத் தண
ங்கரசு வீற்றிருக்கும், மயிலேடக வல்லியை யளிக்
குல முழக்குகுழ லங்கையற் கண்ண முதையே. ()

தேவேந்திரன்.

வேறு.

சூழியுங் கருங்கட் குண்டகழி சுவற்றுஞ் சுடர்வேற்
கிரிதிரித்த, தோன்றற் களித்துச் சுறவுயர்த்த
சொக்கப் பெருமான் செக்கர்முடி,

பொழியுந் தரங்கக் கங்கைவிரை புனல்கால் பாய்ச்
சத் தழைந்துவிரி, புவனந் தனிப்பூத் தருள்பழு
த்த பொன்னங் கொடியைப் புரக்கவழிந்,

திழியுந் துணர்க்கற் பகத்தினற விதழ்த்தேன் குடித்
துக் குமட்டியெதி, ரெடுக்குஞ் சிறைவண் டுவெட்
டுறவுண் டிரைக்கக் கரைக்கு மதக்கலுழிக்,

குழியுஞ் சிறுக ணேற்றுருமுக் குரல்வெண் புயலுங்
கரும்புயலுங், குன்றங் குலைய வுகைத்தேறுங் குலி
சத் தடக்கைப் புத்தேளே. (௬)

திருமகள்.

வேறு.

வெஞ்சூட்டு நெட்டுடல் விரிக்கும் படப்பாயன் மீமி
சைத் துஞ்சு நீல, மேகத்தி னுகத்து விடுசுடர்ப்
படலைமணி மென்பர லுறுத்த நொந்து,

பஞ்சூட்டு சீறடி பதைத்துமதன் வெங்கதிர்ப் படு
மிள வெயிற்கு டைந்தும், பைந்துழாய்க் காடுவிரி

தண்ணீழ லொதுங்குமொர் பசுங்கொடியை யஞ்ச
லிப்பாம்,

மஞ்சூட் டகட்டுநெடு வான்முகடு துருவுமொரு
மறையோதி மஞ்ச லிக்க, மறிதிரைச் சிறைவிரியு
மாயிர முகக்கடவுண் மந்தா கினிப்பெய் யர்த்த,

செஞ்சூட்டு வெள்ளோதி மங்குடி யிருக்கும்வளர்
செஞ்சடைக் கருமிடற்றுத், தேவுக்கு முன்னின்ற
தெய்வத்தை மும்முலைத் திருவைப் புறக்க வெ
ன்றே. (எ)

கலைமகள்.

வெள்ளித் தகட்டுநெட் டேடவிழ்த் தின்னிசை விரு
ம்புஞ் சுரும்பர் பாட, விளைநறவு கக்கும் பொலன்
பொகுட் டலர்கமல வீட்டுக் கொழித் தெடுத்துத்,

தெள்ளித் தெளிக்குந் தமிழ்க்கடலி னன்பினைந் திணை
யென வெடுத்த விறைநூற், றெள்ளமுது கூட்டுணு
மோர் வெள்ளோதி மத்தினிரு சீறடி முடிப்பம்
வளர்பைந்,

கிள்ளைக்கு மழலைப் பசுங்குதலை யொழுகுதீங் கிளவி
யுங் களிம யிற்குக், கிளரிளஞ் சாயலு நவ்விக்கு
நோக்கும்விரி கிஞ்சுகச் சூட்ட ரசனப்,

பிள்ளைக்கு மடநடையு முடனுடு மகளிர்க்கொர்
பேதைமையு முதவி முதிராப், பிள்ளைமையின்
வள்ளன்மை கொள்ளுமொரு பாண்டிப் பிராட்டி
யைக் காக்க வென்றே. (அ)

துர்க்கை.

வடிபட்ட முக்குடுமி வடிவே றிரித்திட்டு வளைகருங்
கோட்டு மோட்டு, மகிடம் கவிழ்த்துக் கடாங்க
விழ்க் குஞ்சிறுகண் மால்யானை வீங்க வாங்கும்,

துடிபட்ட கொடிநுண் ணுசுப்பிற் குடைந்தெனச்
சுடுகடைக் கனலி தூண்டுஞ், சுழல்கண் முடங்
குளை மடங்கலை யுகைத்தேறு சூரரிப் பிணவு
காக்க,

பிடிபட்ட மடநடைக் கேக்கற்ற கூந்தற் பிடிக்குழாஞ்
சுற்ற வொற்றைப், பிறைமருப் புடையதொர் களி
ற்றினைப் பெற்றெந்தை பிட்டுண்டு கட்டுண்டுநின்,

றடிபட்ட திருமேனி குழையக் குழைத்திட்ட வணி
மணிக் கிம்பு ரிக்கோட், டாகத்த தாகக் கடம்பா
டவிக்குள்விளை யாடுமொர் மடப் பிடியையே. (கூ)

சத்தமாதர்கள்.

வேறு.

கடகளி றுதவுக யாப்பிசைப் யோர்த்தவள் கவிகுவி
துறுகலின் வாரியைத் தூர்த்தவள், கடல்வயி றெரி
யவொள் வேலினைப் பார்த்தவள் கடிகமழ் தரும
லர் தார்முடிச் சேர்த்தவள்,

இடியுக வடலரி யேறுகைத் தார்த்தவ ளெழுதரு
முழுமறை நூலினிற் கூர்த்தவ, ளெயிறுகொ டெழு
தெழு பாரினைப் பேர்த்தவ ளெனுமிவ ரெழுவர்க
டாண்முடிச் சூட்டுதும்,

குடமொடு குடவியர் பாணிகைக் கோத்திடு குரவை
யு மலர்தொர்ப ணைமுடிச் சூட்டருள், குதிகொள
நடமிடு பாடலுக் கேற்பவொர் குழலிசை பழகளி
பாடிடக் கேட்டிடை,

மடலவிழ் துளபந றுவெடுத் தூற்றிட மழகளி றென
வெழு கார்முகச் சூற்புயல், வரவரு மிளையகு மாரி
யைக் கோட்டெயின் மதுரையில் வளர்கவு மாரி
யைக் காக்கவே. (க0)

முப்பத்துமூவர்

வேறு.

அமரில் வெங்கிடும வுதியர் பின்னிடுமொ ரபயர் முன்
னிடுவ னத்தொக்க வோடவு, மளவு மெய்ம்மு
டைய திறையி தென்னமுடி யரச ரெண்ணில
ரோர் முற்றத்து வாடவு, மகில மன்னரவர்
திசையின் மன்னரிவ ரமர ரென்னுமுறை திக்
கெட்டு மூடவு, மமுத வெண்மதியின் மரபை
யுன்னியுனி யலரி யண்ணன்முழு வெப்பத்து மூழ்
கவும்,

குமரி பொன்னிவைகை பொருநை நன்னதிகள்
குதிகொள் விண்ணதியின் மிக்குக்கு லாவவுங்,
குவடு தென்மலையி னிகர தின்மைசுரர் குடி
கொள் பொன்மலைது தித்துப்ப ராவவுங், குமரர்
முன்னிருவ ரமர ரன்னையிவள் குமரி யின்னமுமெ
னச்சித்தர் பாடவுங், குரவை விம்மவர மகளிர்
மண்ணிலெழில் குலவு கன்னியர்கள் கைக்கொக்க
வாடவும்,

கமல முன்னியிடு மரச வன்னமெழு கடலி லன்ன
முட னட்புக்கை கூடவுங், கரிய செம்மலொடு
மிளைய செம்மல்விடு கருடன் மஞ்ஞையொடோர்
கட்சிக்கு ளோடவுங், கடவி விண்ணரசு நடவும்
வெம்முனைய களிறு கைம்மலைசெல் கொப்பத்து
வீழவுங், கனக மன்னுதட நளினி துன்னியிரு
கமல மின்னுமொரு பத்மத்துண் மேவவும்,

இமய மென்னமனு முறைகொ டென்னருமெ மிறை
யை நன்மருகெ னப்பெற்று வாழவு, மெவர்கொல்
பண்ணவர்க ளெவர்கொள் மண்ணவர்க ளெது

கொல் பொன்னுலகெ னத்தட்டு மாறவு, மெழில்
செய் தென்மதுரை தழைய மும்முலையொ டெழூ
மெ னம்மனைவ னப்புக்கொர் காவல, ரிருவ ரெண்
மர்பதி னொருவர் பன்னிருவ ரெனும விண்ண
வர்கண் முப்பத்து மூவரே. (கக)

காப்புப்பருவம் முற்றிற்று.

செங்கீரைப்பருவம்.

கீராட்டி யாட்டுபொற் சுண்ணந் திமிர்ந்தள்ளி நெற்றி
யிற் றொட்டிட்ட வெண், ணீற்றினொடு புண்டரக்
கீற்றுக்கு மேற்றிடவொர் நித்திலச் சுட்டி சாத்
தித்,

தாராட்டு சூழியக் கொண்டையு முடித்துத் தலைப்
பணி திருத்தி முத்தின், றண்ணொளி ததும்புங்
குதம்பையொடு காதுக்கொர் தமனியக் கொப்பு
மிட்டுப்,

பாராட்டு பாண்டிப் பெருந்தேவி திருமுலைப் பால
முத மூட்டி யொருநின், பாறூறு குமுதங் கனிந்
தூறு தேறறன் பட்டாடை மடி நனைப்பச்,

சீராட்டி வைத்துமுத் தாடும் பசுங்கிள்ளை செங்
கீரை யாடி யருளே, தென்னற்கு மம்பொன்மலை
மன்னற்கு மொருசெல்வி செங்கீரை யாடி யரு
ளே. (க)

உண்ணிலா வுவகைப் பெருங்களி துளும்பநின் றுன்
றிருத் தாதை நின்னை, யொருமுறை கரம்பொ
த்தி வருகென வழைத்திடுமு னோடித் தவழ்ந்து
சென்று,

தண்ணுலா மழலைப் பசுங்குதலை யமுதினிய தாய் வயிறு குளிர ஊட்டித், தடமார்ப நிறைகுங்கு மச்சே றளைந்துபொற் றூடோய் தடக்கை பற்றிப்,
பண்ணுலா வடிதமிழ்ப் பைந்தாமம் விரியும் பணைத்தோ ளொருத்த மேறிப், பாசொளிய மரகதத் திருமேனி பச்சைப் பசுங்கதிர் ததும்ப மணிவாய்த்,
தெண்ணிலா விரியநின் றூடும் பசுந்தோகை செங்கீரை யாடி யருளே, தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி செங்கீரை யாடி யருளே. (௨)

சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய வெட்டுச் சுவர்க்கா ணிறுத்தி மேருத், தூணொன்று நடுநட்டு வெளி முகடு மூடியிரு சுடர்விளக் கிட்டு முற்ற,
எற்றுபுன லிற்கழுவு புவனப் பழங்கல மெடுத்தடுக் கிப்பு துக்கூ, றின்னமுத மூஞ்சமைத் தன்னைநீ பன்முறை யிழைத்திட வழித்த ழித்தோர்,
முற்றவெளி யிற்றிரியு மத்தப் பெரும்பித்தன் முன்னின்று தொந்த மிடவும், முனியாது வைகலு மெடுத்தடுக் கிப்பெரிய மூதண்ட கூட மூடும்,
சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை செங்கீரை யாடி யருளே, தென்னற்கு மம்பொன் மலை மன்னற்கு மொருசெல்வி செங்கீரை யாடி யருளே. (௩)

மங்குல்படு கந்தரச் சுந்தரக் கடவுட்கு மழகதிர்க் கற்றை சுற்றும், வாணபன மூன்றுங் குளிர்ந்தமுத கலைதலை மடுப்பக் கடைக்க ணோக்கும்,

பொங்குமதர் நோக்கிற் பிறந்தவா னந்தப் புதுப்
புணரி நீத்த மையன், புந்தித் தடத்தினை நிரப்ப
வழி யடியர்பாற் போகசா கரமடுப்ப,

அங்கணெடு ஞாலத்து வித்தின்றி வித்திய வனைத்
துயிர்க ளுந்த ளிர்ப்ப, வருண்மடை திறந்துகடை
வெள்ளம் பெருக்கெடுத் தலையெறிந் துகள வுக
ளும்,

செங்கயல் கிடக்குங் கருங்கட் பசுந்தோகை செங்
கீரை யாடி யருளே, தென்னற்கு மம்பொன்மலை
மன்னற்கு மொருசெல்வி செங்கீரை யாடி யரு
ளே. (ச)

பண்ணுரு வரிமிடற் றறுகான் மடுப்பப் பசுந்தேற
லாற லைக்கும், பதுமபீ டிகையுமுது பழமறை
விரிந்தொளி பழுத்தசெந் நாவு மிமையாக்,

கண்ணுரு மரகதக் கற்றைக் கலாமஞ்ஞை கணமுகி
றதும்ப வேங்கும், கார்வரையும் வெள்ளெனவொர்
கன்னிமா டத்துவளர் கர்ப்பூர வல்லி கதிர்கால்,

விண்ணுரு மதிமுயற் கலைகிழிந் திழியமுத வெள்
ளருவி பாய வெடிபோய், மீளுந் தகட்டகட் டிள
வாளை மோதமுகை விண்டொழுகு முண்டகப்பூந்,

தெண்ணுரு வருவிபாய் மதுரைமா கதவல்லி செங்
கீரை யாடி யருளே, தென்னற்கு மம்பொன்மலை
மன்னற்கு மொருசெல்வி செங்கீரை யாடியருளே.

வேறு.

மூகமதி பூடெழு நகைநில வாட முடிச்சூழியமாட,
மூரிபுரு வக்கொடி நுதலிடு சுட்டி முரிப்பொ
டசைந்தாட,

இகல்விழி மகரமு மம்மக ரம்பொரு மிருமக ரமு
மாட, விடுநூ புரவடி பெயரக் கிண்கி ணெனுங்
கிண் கிணியாடத்,
துகிலொடு சோர்தரு கொடிநுண் மருங்கு றுவண்டு
துவண்டாடத், தொங்கி சரிந்திட வுந்தி கரந்தொ
ளிர் சூலுடை யாலிடைமற்,
றகில சராசர நிகிலமொ டாடிட வாடுக செங்கீரை,
யவனி தழைந்திட மவுலி புனைந்தவ ளாடுக செங்
கீரை. (௬)

தசைந்திடு கொங்கை யிரண்டல வெனவுரை தரு
திரு மார்பாடத், தாய்வரு கென்பவர் பேதைமை
கண்டு ததும்புபு னகையாடப்,
பசைந்திடு ஞால மலர்ந்தமை வெளிறியொர் பச்சு
டல் சொல்லவுமோர், பைங்கொடி யொல்கவு
மொல்கி நுடங்கிய பண்டி சரிந்தாட,
இசைந்திடு தேவை நினைந்தன வென்ன விரங்கிடு
மேகலையோ, டிடுகிடை யாட வியற்கை மணம்
பொதி யிதழ்வழி தேறலினோ,
டசைந்தொசி கின்ற பசுங்கொடி யெனவினி தாடுக
செங்கீரை, யவனி தழைந்திட மவுலி புனைந்தவ
ளாடுக செங்கீரை. (௭)

பரிமள மூறிய வுச்சியின் முச்சி பதிந்தா டச்சுடர்
பொற், பட்டமு டன்சிறு சுட்டியும் வெயிலொடு
பனிவெண் ணிலவாடத்,
திருநுதன் மீதெழு குறுவெயர்வாடத் தெய்வ மணங்
கமழுந், திருமே னியின்முழு மரகத வொளி
யெண் டிக்கும் விரிந்தாடக்,

கருவிளை நாறு குதம்பை ததும்பிய காது தழைந்
தாடக், கதிர்வெண் முறுவ லரும்ப மலர்ந்திடு
கமலத் திருமுகநின்,
அருள்விழி யொடும்வளர் கருணைபொ ழிந்திட
வாடுக செங்கீரை, யவனி தழைந்திட மவுலி
புனைந்தவ ளாடுக செங்கீரை. (அ)

வேறு.

குருமணி வெயில்விட மரகத நிழல்விரி குன்றே நின்
றாதுங், குழலிசை பழகிய மழைமுகி லெழவெழு
கொம்பே வெம்பாச,
மருவிய பிணிகெட மலைதரு மருமை மருந்தே சந்தா
னம், வளர்புவ னமுமுணர் வருமரு மறையின்
வரம்பே செம்போதிற்,
கருணையின் முழுகிய கயமிரி பசிய கரும்பே வெண்
சோதிக், கலைமதி மரபிலொ ரிளமதி யெனவளர்
கன்றே யென்றோதும்,
திருமகள் கலைமக டலைமகண் மலைமகள் செங்கோ
செங்கீரை, தெளிதமிழ் மதுரையில் வளருமொ
ரிளமயில் செங்கோ செங்கீரை. (கூ)

சங்கு கிடந்த தடங்கை நெடும்புய றங்காய் பங்கா
யோர், தமனிய மலைபடர் கொடியென வடிவு
தழைந்தா யெந்தாயென்,
றங்க ணெடும்புவ னங்க டொழுந்தொறு மஞ்சே
லென்றோது, மபயமும் வரதமு முபயமு முடை
யவ னங்கே வெங்கோபக்,
கங்குன் மதங்கய மங்கு லடங்கவி* டுங்கா மன்சே
மக், கயல்குடி புகுமொரு துகிலிகை யெனநின
கண்போ லுஞ்சாயற்,

செங்கய றங்குபொ லன்கொடி மின்கொடி செங்
கோ செங்கீரை, தெளிதமிழ் மதுரையில் வளரு
மொ ரிளமயில் செங்கோ செங்கீரை. (கo)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

தாலப்பருவம்.

தென்னன் றமிழி னுடன்பிறந்த சிறுகா லரும்பத்
தீயரும்புந், தேமா நிழற்கண் டுஞ்சுமிளஞ் செங்
கட் கயவாய்ப் புனிற்றெருமை,

இன்னம் பசும்புற் கறிக்கல்லா விளங்கன் றுள்ளி மடி
த்தலநின், றிழிபா லருவி யுவட்டெறிய வெறியுந்
திரைத்தீம் புனற்பொய்கைப்,

பொன்னங் கமலப் பசுந்தோட்டுப் பொற்று தாடிக்
கற்றைநிலாப், பொழியுந் தரங்கம் பொறையுயிர்
த்த பொன்போற் றிருடோ லடிப்பொலன்சூட்,

டன்னம் பொலியுந் தமிழ்மதுரைக் கரசே தாலோ
தாலேலோ, வருள்சூற் கொண்ட வங்கயற்கண்
ணமுதே தாலோ தாலேலோ. (க)

வீக்குஞ் சிறுபைந் துகிற்றோகை விரியுங் கலாப
மருங்கலைப்ப, விளையாட் டயரு மணற்சிற்றில்
வீட்டுக் குடிபுக் கோட்டியிருள்,

சீக்குஞ் சுடர்தூங் கழல்மணியின் செந்தீ மடுத்து
சூட்டடுப்பிற், செழுந்தாட் பவளத் துவரடுக்கித்
தெளிக்கு நறுந்தண் டேறலுலை,

வாக்குங் குடக்கூன் குழிசியிலம் மதுவார்த் தரித்து
நித்திலத்தின், வல்சி புகட்டி வடித்தெடுத்து வயன்
மா மகளிர் குழாஞ்சிறுசோ,

ரூக்கும் பெருந்தண் பணைமதுரைக் கரசே தாலோ
தாலேலோ, வருள்சூற் கொண்ட வங்கயற்கண்
ணமுதே தாலோ தாலேலோ. (௨)

ஓடும் படலை முகிற்படல முவர்நீத் துவரி மேய்ந்
துகரு, ஆறுங் கமஞ்சூல் வயிறுடைய வுகைத்துக்
கடவுட் கற்பகப்பூங்,

காடுந் தாங்கக் கங்கைநெடுங் கழியு நீந்தி யமுதிறைக்
குங், கலைவெண் மதியின் முயறடவிக் கதிர்மீன்
கற்றை திரைத்துதறி,

மூடுங் ககன வெளிக்கூட முகடு திறந்து புறங்கோ
த்த, முந்நீ ருழக்கிச் சினவாளை மூரிச் சுறவி
னோடும்விளை,

யாடும் பழனத் தமிழ்மதுரைக் கரசே தாலோ தாலே
லோ, வருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே
தாலோ தாலேலோ. (௩)

ஊறுங் கரடக் கடத்துமுகந் தூற்று மதமா மடவி
யர்நின், றுதறுங் குழற்பூந் துகளடங்க வோட
விடுத்த குங்குமச்செஞ்,

சேறு வழுக்கி யோட்டறுக்குந் திருமா மறுகி லர
சர்பெருந், திண்டே ரோதுங்கக் கொடிஞ்சிநெ
டுஞ் சிறுதே ருருட்டுஞ் செங்கண்மழ,

வேறு பொருவே லிளைஞர்கட மிவுளி கடைவாய்க்
குதட்டவழிந், திழியும் விலாழி குமிழியெறிந்
திரைத்துத் திரைத்து நுரைத்தொருபே,

ராறு மடுக்குந் தமிழ்மதுரைக் கரசே தாலோ தாலே
லோ, வருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே
தாலோ தாலேலோ. (௪)

வார்க்குன் றிரண்டு சுமந்தொசியு மலர்க்கொம் பனை
யார் குழற்றுஞ்சு, மழலைச் சுரும்பர் புகுந்துழக்க
மலர்த்தா துகுத்து வானதியைத்,
தூர்க்கும் பொதும்பின் முயற்கலைமேற் றுள்ளி யுகளு
முசுக்கலையின், றுழனிக் கொதுங்கிக் கழனியி
னெற் சூட்டுப் படப்பை மேய்ந்துகதிர்ப்,
போர்க்குன் றேறுங் கருமுகிலை வெள்வாய் மள்ளர்
பிணையலிடும், பொருகோட் டெருமைப் போத்
தினொடும் பூட்டி யடிக்க விடிக்குரல்விட்
டார்க்கும் பழனத் தமிழ்மதுரைக் கரசே தாலோ
தாலேலோ, வருள்சூற் கொண்ட வங்கயற்கண்
ணமுதே தாலோ தாலேலோ. (ரு)

வேறு.

காரிற் பொழிமழை நீரிற் சுழியெறி கழியிற் சிறு
குழியிற், கரையிற் கரைபொரு திரையிற் றலைவிரி
கண்டலின் வண்டலினெற்,
போரிற் களநிறை சேரிற் குளநிறை புனலிற் பொரு
கயலிற், பொழிலிற் சுருள்புரி குழலிற் கணிகையர்
குழையிற் பொருகயல்போய்த்,
தேரிற் குமரர்கண் மார்பிற் பொலிதரு திருவிற் பொ
ருவில்வரிச், சிலையிற் றிரள்புய மலையிற் புலவி
திருத்திட வூழ்க்கமுடித்,
தாரிற் பொருதிடு மதுரைத் துரைமகள் தாலோ தா
லேலோ, சங்கம் வளர்த்திட நின்றபொ லன்கொடி
தாலோ தாலேலோ. (சு)

சேனைத் தலைவர்க டிசையிற் றலைவர்கள் செருவிற்
றலைவர்களாற், சிலையிற் றடமுடி தேரிற் கொடி
யொடு சிந்தச் சிந்தியிடும்,

சோனைக் கணைமழை சொரியப் பெருகிய குருதிக் கடலிடையே, தொந்த மிடும்பல் கவந்த நிவந் தொரு சுழியிற் பவுரிகொள,

ஆனைத் திரளொடு குதிரைத் திரளையு மப்பெயர் மீனமுகந், தம்மின யாடு கடற்றிரை போல வடற் றிரை மோதவெழும்,

தானைக் கடலொடு பொலியுந் திருமகள் தாலோ தா லேலோ, சங்கம் வளர்ந்திட நின்றபொ லன்கொடி தாலோ தாலேலோ. (எ)

அமரர்க் கதிபதி வெளிறக் களிறெதிர் பிளிறக் குளி றியிடா, வண்ட மிசைப்பொலி கொண்ட லுகைத் திடு மமரிற் றமரிறெடுங்,

கமரிற் கவிழ்தரு திசையிற் றலைவர்கண் மலையிற் சிற கரியுங், கடவுட் படையொடு பிறகிட் டுடைவது கண்டு முகங்குளிராப்,

பமரத் தருமலர் மிலையப் படுமுடி தொலையக் கொடு முடிதாழ், பைம்பொற் றடவரை திரியக் கடல்வயி றெரியப் படைதிரியாச்,

சமரிற் பொருதிரு மகனைத் தருமயில் தாலோ தா லேலோ, சங்கம் வளர்ந்திட நின்றபொ லன்கொடி தாலோ தாலேலோ. (அ)

முதுசொற் புலவர் தெளிந்த பசுந்தமிழ் நூல்பாழ் போகாமே, முளரிக் கடவுள் படைத்த வசுந்தரை கீழ்மே லாகாமே,

அதிரப் பொருது கலிப்பகை ஞஞ்றமிழ் நீர்நா டீ ளாமே, யகிலத் துயிர்க ளயர்த்து மறங்கடை நீணீர் தோயாமே,

சிதைவுற் றரசிய னற்றரு மங்குடி போய்மாய் வாகா
மே, செழியர்க் கபயரு மொப்பென நின்றுணை
ராதா ரோதாமே,

மதுரைப் பதிதழை யத்தழை யுங்கொடி தாலோ
தாலேலோ, மலையத் துவசன் வளர்த்த பசுங்கிளி
தாலோ தாலேலோ. (கூ)

தகரக் கரிய குழற்சிறு பெண்பிளை நீயோ தூயோன்
வாழ், சயிலத் தெயிலை வளைப்பவ ளென்றெதிர்
சீறு வீரேறுதா,

நிகரிட் டமர்செய் கணத்தவர் நந்திபி ரானோ டே
யோடா, நிலைகெட் டுலைய வுடற்றவு டைந்தெதா
ரானே றுகாமே,

சிகரப் பொதிய மிசைத்தவ ழுஞ்சிறு தேர்மே லே
போயோர், சிவனைப் பொருத சமர்த்த னுகந்தருள்
சேல்போன் மாயாமே,

மகரத் துவச முயர்த்தபொ லன்கொடி தாலோ தா
லேலோ, மலையத் துவசன் வளர்த்த பசுங்கிளி
தாலோ தாலேலோ. (க0)

தாலப்பருவம் முற்றிற்று.

சப்பாணிப்பருவம்.

காளவட் டத்தளிம ளினத்தொ டுந்துத்தி நாகனை
யும் விட்டொ ரெட்டு, நாட்டத்த னும்பரம வீட்
டத்த னுந்துஞ்சு நள்ளிருளி னுப்ப ணண்ட,

கோளவட் டம்பழைய நேமிவட் டத்தினொடு குப்
புற்று வெற்பெட்டு மேழ், குட்டத்தி னிற்கவிழ
மூதண்ட வேதண்ட கோதண்ட மோடு சக்ர,

வாளவட் டஞ்சுழல மட்டித்து நட்டமிடு மதுமத்தர்
சுத்த நித்த, வட்டத்தி னுக்கிசைய வொற்றிக்க
னத்ததன வட்டத்தை யொத்திட்ட தோர்,
தாளவட் டங்கொட்டு கைப்பாணி யொப்பவொரு
சப்பாணி கொட்டி யருளே, தமிழொடு பிறந்துபழ
மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டி
யருளே. (க)

பொய்வந்த நுண்ணிடை நுடங்கக் கொடிஞ்சிப் பொ
லந்தேரொ டமர கத்துப், பொன்மேரு வில்லியை
யெதிர்ப்பட்ட ஞான்றம்மை பொம்மன்முலை மூ
ன்றி லொன்று,
கைவந்த கொழுநரொடு முள்ளப் புணர்ச்சிக் கருத்
தா னகத்தொ டுங்கக், கவிழ்தலை வணக்கொடு
முலைக்கண்வைத்திடுமொரு கடைக்கணேக் கழுத
மூற்ற,
மெய்வந்த நாணினொடு நுதல்வந் தெழுங்குறு வெயர்
ப்பினெ டுயிர்ப்பு வீங்கும், விம்மிதமு மாய்நின்ற
வுயிரோவ மெனவூன்று விற்கடை விரற்கடை
தழீஇத்,
தைவந்த நாணினொடு தவழ்தந்த செங்கைகொடு சப்
பாணி கொட்டி யருளே, தமிழொடு பிறந்துபழ
மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டி
யருளே. (உ)

பூமரு வெடிப்பமுகை விண்டதண் டலையின்ற புனே
நறுந் தளிர்கள் கொய்தும், பொய்தற் பிணாக்க
ளொடு வண்டற் கலம்பெய்து புழுதிவிளை யாட்
டயர்ந்தும்,

காமரு மயிற்குஞ்சு மடவனப் பார்ப்பினொடு புறவு
பிற வும்வ ளர்த்துங், காந்தள்செங் கமலத்த கழு
நீர் மணங்கெனக் கண்பொத்தி விளையாடியும்,

தேமரு பசுங்கிள்ளை வைத்துமுத் தாடியுந் திரள்
பொற் கழங்காடி யுஞ், செயற்கையா னன்றியு
மியற்கைச் சிவப்பூறு சேயிதழ் விரிந்த தெய்வத்,

தாமரை பழுத்தகைத் தளிரொளி துளும்பவொரு
சப்பாணி கொட்டி யருளே, தமிழொடு பிறந்து
பழ மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்
டி யருளே. (ங)

விண்ணளிக் குஞ்சுடர் விமானமும் பாநாத வெளி
யிற் றுவாத சாந்த, வீடுங் கடம்புபொதி காடுந்
தடம்பணை விரிந்ததமிழ் நாடு நெற்றிக்,

கண்ணளிக் குஞ்சுந் தரக்கடவுள் பொலியுமறு காற்
பீட மும்மெம் பிரான், காமர்பரி யங்கக் கவின்
றங்கு பள்ளியங் கட்டிலுந் தொட்டி லாகப்,

பண்ணளிக் குங்குதலை யமுதொழுகு குமுதப் பசுந்
தேற லூற லாடும், பைங்குழவி பெருவிரல் சுவைத்
துநீ பருகிடப் பைந்தேற லூறு வண்கைத்,

தண்ணளிக் கமலஞ் சிவப்பூற வம்மையொரு சப்
பாணி கொட்டி யருளே, தமிழொடு பிறந்துபழ
மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டி
யருளே. (ச)

சேலாட்டு வாட்கட் கருங்கடற் கடைமடை திறந்த
முத மூற்று கருணை, தெண்டிரை கொழித்தெறிய
வெண்டிரை நெருப்பூட்டு தெய்வக் குழந்தை
யைச்செங்,

கோலாட்டு நின்சிறு கணைக்காற் கிடத்திக் குளிப்
பாட்டி யுச்சி முச்சிக், குஞ்சிக்கு நெய்போற்றி
வெண்காப்பு மிட்டுவளர் கொங்கையிற் சங்கு வாக்
கும்,

பாலாட்டி வாயிதழ் நெரித்தூட்டி யுடலிற் பசுஞ்
சுண்ண முங்கி மிர்ந்து, பைம்பொற் குறங்கினிற்
கண்வளர்த் திச்சிறிய பரூஉமணித் தொட்டி லேற்
றித்,

தாலாட்டி யாட்டுகைத் தாமரை முகிழ்த்தம்மை சப்
பாணி கொட்டி யருளே, தமிழொடு பிறந்துபழ
மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டி
யருளே. (௫)

வேறு.

வானத் துருமொ டுடுத்திரள் சிந்த மலைந்த பறந்தலை
யின், மன்னவர் பன்னவர் வாளின் மறிந்தவர்
மற்றவர் பொற்றொடியார்,

பானற் கணையு மலைக்குவ டும்பொரு படையிற் பட
விமையோர், பைங்குடர் மூளையொ டும்புதி துண்
டு பசுந்தடி சுவைகாணச்,

சேனைப் பந்தரி னலகைத் திரள்பல குரவை பிணைத்
தாடத், திசையிற் றலைவர்கள் பெருநா ணெய்தச்
சிறுநா ணொலிசெய்யாக்,

கூனற் சிலையி னெடுங்கணை தொட்டவள் கொட்டுக
சப்பாணி, குடைநிழ லிற்புவி மகளை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (௬)

சமரிற் பிறகிடு முதியரு மபயரு மெதிரிட் டமரா
டத், தண்ட தரன்செல் கரும்பக டுந்திரன் வெண்
பக டோடுடையாத்,

திமிரக் கடல்புக வருணன் விடுஞ்சுற வருணன் விடுங்
கடவுட், டேரி னுகண்டெழ வார்வில் வழங்கு
கொடுங்கோல் செங்கோலா,
இமயத் தொடும்வளர் குலவெற் பெட்டையு மெல்
லைக் கல்லினிறீஇ, யெண்டிசை யுந்தனி கொண்டு
புரந்து வடாது கடற்றுறைதென்,
குமரித் துறையென வாடு மடப்பிடி கொட்டுக சப்
பாணி, குடைநிழ லிற்புவி மகளை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (எ)

சென்றிடு வாளிகள் கூளிகள் காளிகள் ஞாளியி லாளி
யெனச், செருமலை செம்மலை முதலியர் சிந்தச் சிந்
திட நந்திபிரான்,
நின்றில னோடலு முன்னமு கும்மவன் பின்னமு குங்
காணு, நிலவுவி ரிந்திடு குறுநகை கொண்டு நெடுங்
கயி லைக்கிரியின்,
மூன்றிலி ணுடன் மறந்தம ராடியொர் மூரிச் சிலை
குனியா, முரிபுரு வச்சிலை கடைகுனி யச்சில முளரி
ரிக் கணைதொட்டுக்,
குன்றவி லாளியை வென்ற தடாதகை கொட்டுக சப்
பாணி, குடைநிழ லிற்புவி மகளை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (அ)

வேறு.

ஒழுகிய கருணை யுவட்டெழ வைத்த வருட்பார்
வைக், குளநெகி ழடியர் பவக்கடல் வற்ற வலைத்
தோடிக்,
குழையொடு பொருது கொலைக்கணை யைப்பிணை
யைச்சீறிக், குமிழொடு பழகி மதர்த்த கயற்கண்
மடப்பாவாய்,

தழைகெழு பொழிலின் முசுக்கலை மைப்புய விற்
பரயத், தவழிள மதிகலை நெக்குரு புத்தமு தத்
தோடே,
மழைபொழி யிமய மயிற்பெடை கொட்டுக சப்
பாணி, மதுரையில் வளரு மடப்பிடி கொட்டுக
சப்பாணி. (கூ)

செழுமறை தெளிய வடித்த தமிழ்ப்பதி கத்தோ
டே, திருவரு ளமுது குழைத்து விடுத்தமு லைப்
பாலால்,
கழுமல மதலை வயிற்றை நிரப்பி மயிற்சேயைக், களி
றுடும் வளர வளர்த்த வருட்செவி லித்தாயே,
குழலிசை பழகி முழுப்பிர சத்திர சத்தோடே,
குதிகொளு நறிய கனிச்சுவை நெக்க பெருக்கே
போல்,
மழலையி னமுதுகு சொற்கிளி கொட்டுக சப்பாணி,
மதுரையில் வளரு மடப்பிடி கொட்டுக சப்பாணி.

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

முத்தப்பருவம்.

காலத் தொடுகற் பனைகடந்த கருவூ லத்துப் பழம்
பாடற், கலைமாச் செல்வர் தேடிவைத்த கடவுண்
மணியே யுயிரால,
வாலத் துணர்வென் னீர்பாய்ச்சி வளர்ப்பார்க் கொ
ளிபூத் தருள்பழுத்த, மலர்க்கற் பகமே யெழுதாச்
சொன் மழலை ததும்பு பசுங்குதலைச்,
சேரலைக் கிளியே யுயிர்த்துணையாந் தோன்றுத் து
ணைக்கோர் துணையாகித், துவாத சாந்தப் பெரு
வெளியிற் றுரியங் கடந்த பரநாத,

மூலத் தலத்து முளைத்தமுழு முதலே முத்தந் தரு
கவே, முக்கட் சுடர்க்கு விருந்திடுமும் முலையாய்
முத்தந் தருகவே. (க)

உருகி யுருகி நெக்குநெக்கு ளுடைந்து கசிந்திட்
டகம்பூறு, முழுவ லன்பிற் பழவடியா ருள்ளத்
தடத்தி லூற்றெடுத்துப்,
பெருகு பரமா னந்தவெள்ளப் பெருக்கே சிறியேம்
பெற்றபெரும், பேறேயூறு நறைக்கூந்தற் பிடியே
கொடிநுண் ணுசுப்பொசிய,
வருகுங் குமக்குன் றிரண்டேந்து மலர்ப்பூங் கொம்
பே தீங்குழலின், மதுரங் கனிந்த பசுங்குதலை
மழலை யரும்பச் சேதாம்பன்,
முருகு விரியுஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்
தமே, முக்கட் சுடர்க்கு விருந்திடுமும் முலையாய்
முத்தந் தருகவே. (உ)

கொழுதி மதர்வண் டுழக்குகுழற் கோதைக்குடைந்த
கொண்டலுநின், குதலைக் கிளிமென் மொழிக்கு
டைந்த குறுங்கட் கரும்புங் கூன்பிறைக்கோ,
டுழுத பொலன்சீ றடிக்குடைந்த செந்தா மரையும்
பசுங்கழுத்துக், குடைந்த கமஞ்சூற் சங்குமொழு
கொளிய கமுகு மழகுதொய்யில்,
எழுது தடந்தோட் குடைந்ததடம் பணையும் பணை
மென் முலைக்குடைந்த, விணைமா மருப்புந் தரு
முத்துன் றிருமுத் தொவ்வா விகபரங்கள்,
முழுதுந் தருவாய்நின்கனிவாய் முத்தந் தருக முத்
தமே, முக்கட் சுடர்க்கு விருந்திடுமும் முலையாய்
முத்தந் தருகவே. (ங)

மத்த மதமாக் கவுட்டொருநான் மருப்புப் பொருப்பு மிசைப்பொலிந்த, வானத் தரசு கோயில்வளர் சிந் தா மணியும் வடபுலத்தார்,
நத்தம் வளர வளர்கையர்கோ னகரில் வளரும் வான் மணியும், நளினப் பொகுட்டில் வீற்றிருக்கு நங் கை மனைக்கோர் விளக்கமெனப்,
பைத்த சுடிகைப் படப்பாயற் பதும நாபன் மார்பில் வளர், பரிதி மணியு மெமக்கம்மை பணியல் வாழி வேயின்ற,
முத்த முகந்த நின்கனிவாய் முத்தந் தருக முத்தமே, முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய் முத் தந் தருகவே. (ச)

கோடுங் குவடும் பொருதரங்கக் குமரித் துறையிற் படுமுத்துங், கொற்கைத்துறையிற் றுறைவாணர் குளிக்குஞ் சலாபக் குவான்முத்தும்,
ஆடும் பெருந்தண் டுறைப்பொருனை யாற்றிற் படு தெண் ணிலாமுத்து, மந்தண் பொதியத் தடஞ் சார லருவி சொரியுங் குளிர்முத்தும்,
வாடுங் கொடிநுண் ணுசுப்பொசிய மடவ மகளி ருட ஞடும், வண்டற் றுறைக்கு வைத்துநெய்த்துமணந் தாழ் நறுமென் புகைப்படல,
மூடுங் குழலாய் நின்கனிவாய் முத்தந் தருக முத் தமே, முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய் முத்தந் தருகவே. (ரு)

வேறு.

பைவைத்த துத்திப் பளுஉச்சுடிகை முன்றிற் பசுங் கொடி யுடுக்கை கிழியப், பாயிருட் படலங் கிழித் தெழு சுடர்ப்பரிதி பரிதிக் கொடிஞ்சி மான்றேர்,

மொய்வைத்த கொய்யுளை வயப்புரவி வாய்ச்செல்ல
முட்கோல் பிடித்துநெடுவோன், முற்றத்தை யிருள்
பட விழுங்குந் துகிற்கொடி முனைக்கணை வடிம்பு
நக்கா,

மைவைத்த செஞ்சிலையு மம்புலியு மோடநெடு வான்
மீன் மணந்து கந்த, வடவரை முகந்தநின் வயக்
கொடி யெனப்பொலியு மஞ்சிவர் வளாக நொச்
சித்,

தெய்வத் தமிழ்க்கூட றழையத் தழைத்தவ டிருப்
பவள முத்த மருளே, செல்வைத்த வொண்கொ
டியை வலம்வைத்த பெண்கொடி திருப்பவள
முத்த மருளே. (சு)

பின்னற் றிரைக்கடன் மதுக்குட மறத்தேக்கு பெய்
முகிற் காருடலம் வெண், பிறைமதிக் கூன்குயக்
கைக்கடைஞ ரொடுபுடை பெயர்ந்திடை நுடங்க
வொல்கு,

மின்னற் றடித்துக் கரும்பொற் றொடிக்கடைசி மெல்
லியர் வெரீஇப் பெயரவான், மீன்கணம் வெருக்
கொள்ள வெடிவரால் குதிகொள்ளும் விட்புலம்
விளைபுல மெனக்

கன்னற் பெருங்காடு கற்பகக் காட்டுவளர் கடவுண்மா
கவளங் கொளக், காமதே னுவுநின் றுகடைவாய்
குதட்டக் கதிர்க்குலை முதிர்ந்து விளையுஞ்,

செந்நெற் படப்பைமது ரைப்பதி புரப்பவ டிருப்ப
வள முத்த மருளே, செல்வைத்த வொண்கொ
டியை வலம்வைத்த பெண்கொடி திருப்பவள
முத்த மருளே. (எ)

சங்கோ விடுங்கடற் றுணைக்கு வெங்கிடு தாரபதிகண் மூன்றி றார்த்த, தமனியக் குப்பையுந் திசைமுதல் வர் தடமுடித் தாமமுந் தலைம யங்கக்,

கொங்கோ விடுங்கைக் கொடுங்கோ லொடுங்கிரி குறும்பன் கொடிச்சு றவுகின், கொற்றப் பதாகைக் குழாத்தினொடு மிரசிதக் குன்றினுஞ் சென்று லாவப்,

பொங்கோல வேலைப் புறத்தினொ டகத்தினிமிர் போராழி பரிதி யிரதப், பொங்காழி மற்றப் பொருப்பாழி யிற்றிரி புலம்பப் புலம்பு செய்யச்,

செங்கோ றிருத்திய முடிச்செழியர் கோமக டிருப்பவள முத்த மருளே, சேல்வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்கொடி திருப்பவள முத்த மருளே. (அ)

வேறு.

பருவரை முதுபல வடியினி னெடுகில நெக்க குடக்கனியிற், படுநறை படுகிறை கடமுடை படுவ கடுப்பவு வட்டெழவும்,

விரிதலை முதலொடு விளைபுல முலைய வுழக்கிய முட்சுறவின், விசையினின் வழிநறை மிடறொடி கமுகின் விழுக்குலை நெக்குகவும்,

கரையெறி புணரியி னிருமடி பெருகு தடத்து மடுத்தகடக், களிறொடு பிளிறிட விகலிய முகிலி னிரட்டி யிரட்டியமும்,

முரசதிர் கடிநகர் மதுரையில் வளர்கிளி முத்த மளித்தருளே, முழுதுல குடையதொர் கவுரியர் குலமணி முத்த மளித்தருளே. (கூ)

புதையிருள் கிழிதர வெழுதரு பரிதி வளைத்த கடற்
புவியிற், பொதுவற வடிமைசெய் திடுவழி யடியர்
பொருட்டலர் வட்டணையிற்,
ததைமலர் பொதுளிய களியளி குமிறுகு ழற்றிரு
வைத்தவளச், சததள முளரியின் வனிதையை
யுதவு கடைக்கண் மடப்பிடியே,
பதுமமொ டொழுகொளி வளையுநி னளின முகத்து
மிடற்றுமுறப், பனிமதி யொடுசுவை யமுதமு
நுதலொடு சொற்குத லைக்கணிறீஇ,
முதுதமி ழுததியில் வருமொரு திருமகண் முத்த
மளித்தருளே, முழுதுல குடையதொர் கவுரியர்
குலமணி முத்த மளித்தருளே. (௧0)

முத்தப்பருவம் முற்றிற்று.

வருகைப்பருவம்.

அஞ்சிலம் போலிட வரிக்குரற் கிண்கிணி யாற்று
செஞ் சீறடி பெயர்த், தடியிடுந் தொறுநின் னலத்
தகச் சுவடுபட் டம்புவி யரம்பை யர்கடம்,
மஞ்சுதுஞ் சளகத் திளம்பிறையு மெந்தைமுடி வளரி
ளம் பிறையுநாற, மணிநூ புரத்தவிழு மென்குரற்
கோவசையு மடநடைக் கோதொடர்ந்துன்,
செஞ்சிலம் படிபற்று தெய்வக் குழாத்தினொடு சிறை
யோதி மம்பின் செலச், சிற்றிடைக் கொல்கிமணி
மேகலை யிரங்கத் திருக்கோயிலெனவெ னெஞ்சக்,
கஞ்சமுஞ் செஞ்சொற் றமிழ்க்கூட லுங்கொண்ட கா
மர்பூங் கொடி வருகவே, கற்பகா டவியிற் கடம்
பா டவிப்பொலி கயற்க ணயகி வருகவே. (௧)

குண்டுபடு பேரகழி வயிறுளைந் தீன்றபைங் கோதை
யும் மதுர மொழுகுங், கொழிதமிழ்ப் பனுவற்று
றைப்படியு மடநடைக் கூந்தலம் பிடியு மறுகால்,
வண்டுபடு முண்டக மனைக்குடி புகச்சிவ மணங்கமழ
விண்ட தொண்டர், மானதத் தடமலர்ப் பொற்
கோயில் குடிகொண்ட மாணிக்க வல்லி வில்லே,
டுண்டுபடு மதிநுதற் றேகையொடு மளவில்பல
தொல்லுரு வெடுத் தமர்செயுந், தொடுசிலை யென
க்ககன முகடுமுட் டிப்பூந் துணர்த்தலை வணங்கி
நிற்குங்,
கண்டுபடு கன்னல்லைங் காடுபடு கூடற் கலாபமா
மயில் வருகவே, கற்பகா டவியிற் கடம்பா டவிப்
பொலி கயற்க ணுயகி வருகவே. (உ)

முயல்பாய் மதிக்குழவி தவழ்கூ லடிப்பலவின் முட்
பொதி குடக்கனி யொடு, முடவுத் தடந்தாழை
முப்புடைக் கனிசிந்த மோதிநீ ருண்டி ருண்ட,
புயல்பாய் படப்பைத் தடம்பொழில்க ளன்றியேழ்
பொழிலையு மொருங்கலைத்துப், புறமூடு மண்டச்
சுவர்த்தல மிடித்தப் புறக்கடன் மடுத்து ழக்கிச்,
செயல்பாய் கடற்றுனை செங்களங் கொளவம்மை திக்
குவிச யங்கொண்ட நா, டெய்வக் கயற்கொடிக
டிசைதிசை யெடுத்தெனத் திக்கெட்டு முட்ட
வெடிபோய்க்,
கயல்பாய் குரம்பணை பெரும்பணைத் தமிழ்மதுரை
காவலன் மகள் வருகவே, கற்பகா டவியிற் கடம்
பா டவிப்பொலி கயற்க ணுயகி வருகவே. (ங)

வடம்பட்ட நின்றுணைக் கொங்கைக் குடங்கொட்டு
மதுரவமு துண்டு க்கடைவாய், வழியும்வெள் ளரு

வியென நிலவுபொழி கிம்புரி மருப்பிற் பொருப்பி
டித்துத்,
தடம்பட்ட பொற்றூது சிந்துரங் கும்பத் தலத்தணி
வ தொப்ப வப்பிச், சலராசி யேழுந் தடக்கையின்
முகந்துபின் றூனநீ ராளி ரப்பி,
முடம்பட்ட மதியங் குசப்படை யெனக்ககன முகடு
கை தடவி யுடுமீன், முத்தம் பதித்திட்ட முகபடா
மெனவெழு முகிற்படா நெற்றி சுற்றும்,
கடம்பட்ட சிறுகட் பெருங்கொலைய மழவிளங் களி
றீன்ற பிடி வருகவே, கற்பகா டவியிற் கடம்பா
டவிப்பொலி கயற்க ணாயகி வருகவே. (௪)

தேனொழுகு கஞ்சப் பொலன்சீ றடிக்கூட்டு செம்
பஞ்சி யின்கு ழம்பாற், றெள்ளமு திறைக்கும்
பசுங்குழவி வெண்டிங்கள் செக்கர்மதி யாக்கரை
பொரும்,
வானொழுகு துங்கத் தரங்கப் பெருங்கங்கை வாணி
நதி யாச் சிவபிரான், மகுடகோ டீரத் தடிச்சுவ
டழுத்தியிடு மரகதக் கொம்பு கதிர்கால்,
மீனொழுகு மாயிரு விசும்பிற் செலுங்கடவுள் வேழத்
தின் மத்த கத்து, வீற்றிருக் குஞ்சே யிழைக்கும்
பசுங்கமுகு வெண்கவரி வீசும் வாசக்,
காவொழுகு தடமலர்க் கடிபொழிற் கூடல்வளர் கவு
ரியன் மகள் வருகவே, கற்பகா டவியிற் கடம்பா
டவிப்பொலி கயற்க ணாயகி வருகவே. (௫)

வேறு.

வடக்குங் குமக்குன் றிரண்டேந்தும் வண்டன் மக
ளிர் சிறுமுற்றில், வாரிக் குவித்த மணிக்குப்பை
வானா றடைப்ப வழிபிழைத்து,

நடக்குங் கதிர்பொற் பரிசிலா நகுவெண் பிறைகைத்
தோணியதா, நாண்மீன் பரப்புச் சிறுமிதப்பா
நாப்பண் மிதப்ப நாற்கோட்டுக்,

கடக்குஞ் சரத்தின் மதநதியுங் கங்கா நதியு மெதிர்
கொள்ளக், ககன வெளியுங் கற்பகப்பூங் காடுங்
கடந்து கடல்சுருங்க,

மடுக்குந் திரைத்தண் டுறைவைகை வளநாட் டரசே
வருகவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே
வருக வருகவே. (௬)

சுண்ணந் திமிர்ந்து தேனருவி துளைந்தா டறுகாற்
றும்பிபசுந், தோட்டுக் கதவந் திறப்பமலர்த் தோ
கை குடிப்புக் கோகைசெயுந்,

தண்ணங் கமலக் கோயில்பல சமைத்த மருதத் தச்
சன்முழு, தாற்றுக் கமுகு நாற்றியிடுந் தடங்கா
வணப்பந் தரில்வீக்கும்,

விண்ணம் பொதிந்த மேகபடா மிசைத்தூக் கியபன்
மணிக்கொத்து, விரிந்தா லெனக்கா னிமிர்ந்து
தலை விரியுங் குலைநெற் கற்றைபல,

வண்ணம் பொலியும் பண்ணைவயன் மதுரைக் கரசே
வருகவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே
வருக வருகவே. (௭)

தகரக் குழலி னறையுநறை தருதீம் புகையுந் திசைக்
களிற்றின், றடக்கை நாசிப் புழைமடுப்பத் தள
ருஞ் சிறுநுண் மருங்குல்பெருஞ்,

சிகரக் களபப் பொம்மன்முலைத் தெய்வ மகளிர்
புடையிரட்டுஞ், செங்கைக் கவரி முகந்தெறியுஞ்
சிறுகாற் கொசிந்து குடிவாங்க,

முகரக் களிவண் டடைகிடக்கு முளரிக் கொடிக்குங் கலைக்கொடிக்கு, முருந்து முறுவல் விருந்திடுபுன் மூர னெடுவெண் ணிலவெறிப்ப,

மகரக் கருங்கட் செங்கனிவாய் மடமான் கன்று வருகவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே. (அ)

தொடுக்குங் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே நறைபழுத்த, துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ் சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்,

தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே வளர்சிமய, விமயப் பொருப்பில் விளையாடு மிளமென் பிடியே யெறிதரங்கம்,

உடுக்கும் புவனங் கடந்துநின்ற வொருவன் றிருவுள் ளத்திலழ, கொழுக வெழுதிப் பார்த்திருக்கு முயிரோ வியமே மதுகரம்வாய்,

மடுக்குங் குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே. (கூ)

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற் பிடியே வருக முழுஞானப், பெருக்கே வருக பிறைமௌலிப் பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்,

விருந்தே வருக மும்முதற்கும் வித்தே வருக வித்தின்றி, விளைக்கும் பரமா னந்தத்தின் விளைவே வருக பழமறையின்,

குருந்தே வருக வருள்பழுத்த கொம்பே வருக திருக்கடைக்கண், கொழித்த கருணைப் பெருவெள்ளங் குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்,

மருந்தே வருக பசுங்குதலை மழலைக் கிளியே வரு கவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே. (௧0)

வருகைப்பருவம் முற்றிற்று.

அம்புலிப்பருவம்.

கண்டுபடு குதலைப் பசுங்கிளி யிவட்கொரு கலாபேத மென்ன நின்னைக், கலைமறைகண் முறையிடுவ கண் டோ வலாதொண் கலாநிதி யெனத் தெரிந்தோ,

வண்டுபடு தெரியற் றிருத்தாதை யார்மரபின் வழி முத லெனக் குறித்தோ, வளர்சடை முடிக் கெந்தை தண்ணறுங் கண்ணியா வைத்தது கடைப் பிடித்தோ,

குண்டுபடு பாற்கடல் வருந்திருச் சேடியொடு கூடப் பிறந்த தோர்ந்தோ, கோமாட்டி யிவணின்னை வம் மெனக் கொம்மெனக் கூவிடப் பெற்று யுனக்,

கண்டுபடு சீரிதன் ருதலா லிவளுட னம்புலீ யாட வாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (௧)

குலத்தோடு தெய்வக் குழாம்பிழிந் தூற்றிக் குடித் துச் சுவைத் துமிழ்ந்த, கோதென்று மழல்விடங் கொப்பளிக் கின்றவிரு கோளினுச் சிட்ட மென் றும்,

கலைத்தோடு மூடிக் களங்கம் பொதிந்திட்ட கயரோ கி யென்று மொருநாள், கண்கொண்டு பார்க்கவுங் கடவதன் றெனவிக் கடற்புவி யெடுத் திகழவிட்,

புலத்தோடு முடுமீன் கணத்தோடு மோடுகின் போல்
வார்க்கு மாபா தகம், போக்குமித் தலமலது புக
லில்லை காண்மிசைப் பொங்குபுனல் கற்ப கக்கா,

டலைத்தோடு வைகைத் துறைப்படி மடப்பிடியொ
டம்புலீ யாட வாவே, யாணிப்பொன் வில்லிபுணர்
மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (௨)

கீற்றுமதி யெனநிலவு தோற்றுபரு வத்திலொளி
கிளர்நுதற் செவ்வி வவ்விக், கெண்டைத் தடங்
கணு ரெருவிட் டிறைஞ்சக் கிடந்தது முடைங்
தமுதம்விண்,

டேற்றுபுது வெண்கலை யுடுத்துமுழு மதியென வுதித்த
வமை யத்து மம்மை, யொண்முகத் தொழுகு
திரு வழகைக் கவர்ந்துகொண் டோடினது நிற்க
மற்றை,

மாற்றவ ளொடுங் கேள்வர் மௌலியி லுறைந்தது
மறந்துனை யழைத்த பொழுதே, மற்றிவள் பெரு
ங்கருணை சொற்றிடக் கடவதோ மண்முழுதும்
விம்மு புயம்வைத்,

தாற்றுமுடி யரசுதவு மரசிளங் குமரியுட னம்புலீ
யாட வாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மாணி
க்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (௩)

விண்டலம் பொலியப் பொலிந்திடுதி யேலுனது
வெம்பணிப் பகை விழுங்கி, விக்கிடக் கக்கிடத்
தொக்கிடர்ப் படுதிவெயில் விரியுஞ் சுடர்ப் பரிதி
யின்,

மண்டலம் புக்கனை யிருத்தியெனி னுள்ளொளி
மழுங்கிட வழுங் கிடுதிபொன், வளர்சடைக் காட்

டெங்கை வைத்திடப் பெறுதியேன் மாசுணஞ் சுற்ற வச்சம்,
கொண்டுகண் டுஞ்சா திருப்பது மருப்பொங்கு கோதையிவள் சீறடிக ணின், சூடர்குழம் பிடவே குமைப்பதும் பெறுதியெங் கோமாட்டி பாலடைந்தால்,
அண்டபகி ரண்டமு மகண்டமும் பெறுதியா லம்புலீ யாட வாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (௪)

எண்ணில்பல புவனப் பெருந்தட்டை யூடுருவி யிவள்பெரும் புகழ் நெடுநிலா, வெங்கணு நிறைந்திடுவ தங்கதனின் மெள்ளநீ யெள்ளளவு மொண்டு கொண்டு,
வெண்ணிலவு பொழிவது கிடைத்தனை மடுத்திவள் விழிக்கடை கொழித்த கருணை, வெள்ளந் திளைத்தாடு பெற்றியாற் றண்ணளி விளைப்பதும் பெற்றனை கொலாம்,
மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது னிடத்தம்மை வைத்திடுஞ் சத்தி யேகாண், மற்றொரு சுதந்தர நினக்கென விலைக்கலை மதிக்கடவு ணீயு முணர்வாய்,
அண்ணலங் களியானை யரசர்கோ மகளுட னம்புலீ யாட வாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (௫)

மூன்பும்ப ரரசுசெய் பெரும்பாவ மூங்கோப மூரிமாத் தொடர் சாபமும், மும்மைத் தமிழ்ச்செழியன் வெப்பொடு கொடுங்கூனு மோசித்த வித்தலத்தின்,

MARAIMALAI ADIGAL LIBRARY

றன்பெருந் தன்மையை யுணர்ந்திலைகொல் சிவராச
தானியாய்ச் சீவன் முத்தித், தலமுமாய்த் துவாத
சாந் தத்தலமு மானதித் தலமித் தலத் தடைதி
யேல்,

மன்பெருங் குரவற் பிழைத்தபா வமுமற்றை மாம
டிக ளிடு சாபமும், வளரிளம் பருவத்து நரை
திரையு முதிர்கூனு மாற்றிடப் பெறுதி கண்டாய்,

அன்பரென் புருகக் கசிந்திடு பசுந்தேனொ டம்புலீ
யாட வாவே, யாணிப்பொன் வில்லிபுணர் யாணி
க்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (௬)

கும்பஞ் சுமந்தமத வெள்ளநீர் கொட்டுங் கொடுங்
களி றிடும் போர்வையான், குடிலகோ டீரத் திரு
ந்துகொண் டந்நலார் கொய்தளிர்க் கை வருடவுஞ்,

செம்பஞ் சுறுத்தவும் பதைபதைத் தாரழற் சிகை
யெனக் கொப்ப ளிக்குஞ், சீறடிகள் கன்றிச் சிவந்
திடச் செய்வதுந் திருவுளத் தடையாது பொற்,

றம்பஞ் சுமந்தீன்ற மானுட விலங்கின் றனிப்புதல்வ
னுக்கு வட்டத், தண்குடை நிழற்றுநினை வம்மெ
ன வழைத்தன டழைத்திடு கழைக் கரும்பொன்,

றம்பஞ் சுடன்கொண்ட மகரக் கொடிக்கொடியொ
டம்புலீ யாட வாவே, யாணிப்பொன் வில்லிபுணர்
மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (எ)

துளிதூங்கு தெள்ளமுத வெள்ளருவி பொழியுநின்
றொன்மரபு தழைய வந்து, தோன்றிடுங் கௌரி
யர் குலக்கொழுந் தைக்கண்டு துணைவிழியு மனமு
நின்று,

களிதூங்க வளவளாய் வாழாம லுண்ணமுது கலை
யொடு மிழந்து வெறுமட், கலத்திடு புதுக்கூ
ழினுக்கிரவு பூண்டொரு களங்கம்வைத் தாயிது
வலால்,
ஒளிதூங்கு தெளிவிசும் பினினின்றொ டொத்தவ
னொருத்தன் கரத்தின் வாரி, யுண்டொதுக் கிய
மிச்சி னள்ளிருளி லள்ளியுண் டோடுகின் றுயென்
செய்தாய்,
அளிதூங்கு ஞிமிறெழூந் தார்க்குங் குழற்றிருவொ
டம்புலீ யாட வாவே, யாணிப்பொன் வில்லிபுணர்
மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (அ)
மழைக்கொந் தளக்கோதை வம்மினென் றளவினீ வந்
திலை யெனக் கடுகலும், வாண்முகச் செவ்விக்
குடைந்தொதுங் கினவனெதிர் வரவொல்கி யோ
பணிகள்கோ,
விழைக்குங்கொல் பின்றொடர்ந் தெனவஞ்சி யோதா
ழ்த் திருந்தனன் போலு மெனயா, மித்துணையு
மொருவாறு தப்புவித் தோம்வெகுளி னினியொ
ரு பிழைப் பில்லைகாண்,
தழைக்குந் துகிற்கொடி முகிற்கொடி கிரைத்துமேற்
றலம்வளர் நகிற் கொடிகளைத், தாழ்குழலு நீவி
நுதல் வெயர்வுந் துடைத்தம்மை சமயமிது வென்
றலுவலிட்,
டழைக்குந் தடம்புரிசை மதுரைத் துரைப்பெணுட
னம்புலீ யாட வாவே, யாணிப்பொன் வில்லிபுணர்
மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே, (௯)
ஏடகத் தெழுதாத வேதச் சிரத்தர சிருக்குமிவள்
சீறடிக ணின், னிதயத் தடத்தும் பொலிந்தவா
திருவுளத் தெண்ணியன் றேக படமா,

நாடகத் தைந்தொழி னடிக்கும் பிரான்றெய்வ நதி
யொடு முடித்தல் பெற்றாய், நங்கையிவ டிருவுள
மகிழ்ச்சிபெறி லிதுபோலொர் நற்றவப் பேறில்லை
காண்,

மாடகக் கடைதிரித் தின்னரம் பார்த்துகிர் வடிம்
புதைவருமங் கலார், மகரயாழ் மழலைக்கு மரவங்க
ளுண்டுகில் வழங்கக் கொழுங் கோங்குதூங்,

காடகப் பொற்கிழி யவிழ்க்குமது ரைத்திருவொ டம்
புலீ யாட வாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மா
ணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (௧௦)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

அம்மானைப்பருவம்.

கரைக்குங் கடாமிரு கவுட்குட முடைந்தூற்று களி
றுபெரு வயிறு தூர்ப்பக், கவளந் திரட்டிக் கொ
டுப்பதென வுஞ்சூழ்ந்தொர் கலைமதிக் கலச வமு
துக்,

திரைக்கும் பெருந்தேவர் புன்கண் டுடைத்திட வெ
டுத்தமுத கலசம் வெவ்வே, றீந்திடுவ தெனவு
முழு முத்திட் டிழைத்திட்ட வெறிபந்தர் நிரை
யென்னவும்,

விரைக்குந் தளிர்க்கைக் கொழுந்தா மரைத்துஞ்சி
மீதெழுந் தார்த்தபிள்ளை, வெள்ளோதி மத்திரளி
தெனவுங் கரும்பாறை மீமிசைச் செஞ்சாந்துவைத்,

தரைக்குந் திரைக்கைவெள் ளருவிவை கைத்துறை
வி யம்மானை யாடி யருளே, யாகங் கலந்தொருவர்
பாகம் பகிர்ந்தபெண் ணம்மானை யாடி யருளே. ()

திங்கட் கொழுந்தைக் கொழுந்துபடு படர்சடைச்
செருகுதிரு மணவாளன் மேற், செழுமணப் பந்
தரி லெடுத்தெறியு மமுதவெண் டிரளையிற் புரளு
மறுகாற்,

பைங்கட் சுரும்பென விசும்பிற் படர்ந்தெழும் பனி
மதி மிசைத்தா விடும், பருவமட மானனைவெ
னம்மனைநி னம்மனைப் படைவிழிக் கயல் பாய்ந்
தெழ,

வெங்கட் கடுங்கொலைய வேழக்கு ழாமிதென மேகக்
குழாத்தை முட்டி, விளையாடு மழகளிறு கடை
வாய் குதட்டமுகை விண்டவம் பைந்து கோத்த,

அங்கட் கரும்பேந்து மபிடேக வல்லிதிரு வம்மானை
யாடி யருளே, யாகங் கலந்தொருவர் பாகம் பகிர்
ந்தபெண் ணம்மானை யாடி யருளே. (௨)

கள்ளூறு கஞ்சக் கரத்தூறு சேயொளி கலப்பச் சிவ
ப் பூறியுங், கருணைப் பெருக்கூற வமுதூறு பார்
வைக் கடைக்கட் கறுப் பூறியும்,

தெள்ளூறு மறுவூ றகற்றுமுக மதியில்வெண் ணகை
யூறு நில வூறியு, நற்றாள வம்மனையொர் சிற்கு
ணத் தினைமூன்று நற்குணங் கதுவல் காட்ட,

உள்ளூறு களிதுளும் பக்குரவ ரிருவீரு முற்றிடு
துவாத சாந்தத், தொருபெரு வெளிக்கே விழித்து
றங் குந்தொண்ட ருழுவலன் பென் புருகநெக்,

கள்ளூற வுள்ளே கசிந்தூறு பைந்தேற லம்மானை
யாடி யருளே, யாகங் கலந்தொருவர் பாகம் பகிர்
ந்தபெண் ணம்மானை யாடி யருளே. (௩)

குலைபட்ட காந்தட் டளிர்க்கையிற் செம்மணி குயின்
றவம் மனைநித் திலங், கோத்தவம் மனைமுன் செ
லப்பின் செலுந்தன்மை கோகனக மனையாட்டி
பாற்,

கலைபட்ட வெண்சுடர்க் கடவுடோய்ந் தேகுவது கண்
டுகொண் டேபு ழுங்கும், காய்கதிர்க் கடவுளும்
பின்றொடர்வ தேய்ப்பக் கறங்கருவி தூங்க வோ
ங்கு,

மலைபட்ட வாரமும் வயிரமும் பிறவுமா மாமணித்
திரளை வாரி, மறிதிரைக் கையா லெடுத்தெறிய
நாற்கோட்டு மதகளிறு பிளிறி யோடும்,

அலைபட்ட வைகைத் துறைச்சிறை யனப்பேடை
யம்மானை யாடி யருளே, யாகங் கலந்தொருவர்
பாகம் பகிர்ந்தபெண் ணம்மானை யாடி யருளே. ()

தமரான நின்றுணைச் சேடியரி லொருசிலர் தடக்கை
யி னெடுத் தாடுநின், றாளவம் மனைபிடித் தெதிர்
வீசி வீசியிட சாரிவல சாரி திரியா,

நிமிராமு னம்மனையொ ராயிர மெடுத்தெறிய நிரை
நிரைய தாய்க் ககனமே, னிற்கின்ற தம்மைநீ
பெற்றவகி லாண்டமு நிரைத்துவைத் தது கடுப்ப,

இமிரா வரிச்சுரும் பார்த்தெழப் பொழிலூ டெழுந்
தபைந் தாதுல கெலாம், மிருள்செயச் செய்துநின்
சேனைய ராகமெனு மேக்கமள காபுரிக்கும்,

அமராவ திக்குஞ்செய் மதுராபு ரித்தலைவி யம்மானை
யாடி யருளே, யாகங் கலந்தொருவர் பாகம் பகிர்
ந்தபெண் ணம்மானை யாடி யருளே. (ரு)

உயிரா யிருக்கின்ற சேடியரின் மலர்மீ துதித்தவ
ளெதிர்த்து நின்றே, டொட்டியெட் டிப்பிடித்
திட்டவம் மனைதேடி யோடியா டித்திரிய நீ,

பெயரா திருந்துவிளை யாடுவது கண்டெங்கை பிறை
முடிதுளக்க முடிமேற், பெருகுசுர கங்கைநுரை
பொங்கலம் மானையப் பெண்கொடியு மாடன்
மான,

வெயரா மனம்புழுங் கிடுமமரர் தச்சனும் வியப்பச்
செயுந் தவளமா, மேடையுந் தண்டரள மாடமுந்
தெண்ணிலா வீசத் திசைக் களிறெலாம்,

அயிரா வதத்தினை நிகர்க்குமது ரைத்தலைவி யம்மானை
யாடி யருளே, யாகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்
தபெண் ணம்மானை யாடி யருளே. (௬)

வேறு.

முத்த மழுத்திய வம்மனை கைம்மலர் முளரிம ணங்க
மழ, மொய்குழல் வண்டினின் மைவிழி வண்டின்
முயங்கி மயங்கியிடக்,

கொத்து மணித்திர ளிற்செயு மம்மனை குயிலின்
மிழற்றியநின், குழலி னிசைக்குரு கிப்பனி தூங்கு
குறுந்துளி சிந்தியிட,

வித்துரு மத்தி லிழைத்தவு நின்கை விரற்பவ ளத்த
ளிரின், விளைதரு மொள்ளொளி திருடப் போ
வது மீள்வது மாய்த்திரிய,

அத்தன் மனத்தெழு தியவுயி ரோவிய மாடுக வம்ம
னையே, யழகு தழைந்தகல் யாண சவுந்தரி யாடுக
வம்மனையே. (௭)

விளரி மிழற்றளி குமிறு குழற்கொடி வீசிய வம்மனை
போய், விண்ணி னிரைத்தெழு வதுகக னந்திரு
மேனிய தானவருக்,
கிளநில வுமிழ்பரு முத்தின் கோவை யெடுத்தவர்
திருமார்புக், கிடுவ கடுப்பவு மப்பரி சேபல மணி
யினி யற்றியிடும்,
வளரொளி விம்மிய வம்மனை செல்வது வானவி
லொத்திடவு, மனனெக் குருகப் பரமா னந்த
மடுத்த திருத்தொண்டர்க்,
களிகனி யத்திரு வருள்கனி யுங்கனி யாடுக வம்மனை
யே, யழகு தழைந்தகல் யாண சவுந்தரி யாடுக
வம்மனையே. (அ)

கைம்மல ரிற்பொலி கதிர்முத் தம்மனை நகைமுத்
தொளிதோயக், கண்டவர் நிற்கப் பிறர்சிலர் செங்
கைக் கமலச் சுடர்கதுவச்,
செம்மணி யிற்செய் திழைத்தன வெனவுஞ் சிற்சிலர்
கட்கடையின், செவ்வியை வவ்விய பின்கரு மணி
யிற் செய்தன கொல்லெனவும்,
தம்மன மொப்ப வுரைப்பன மற்றைச் சமயத் தமை
வுபெறுர், தத்தமி னின்று பிதற்றுவ பொருவத்
தனிமுதல் யாமென்பார்க்,
கம்மனை யாயவர் தம்மனை யானவ ளாடுக வம்மனை
யே, யழகு தழைந்தகல் யாண சவுந்தரி யாடுக
வம்மனையே. (கூ)

ஒள்ளொளி மரகத மும்முழு நீலமு மொண்டர ளத்
திரளு, மொழுசொளி பொங்க விழைத்திடு மம்
மனை யொருமூன் றடைவிலெடாக்,

கள்ளவிழ் கோதை விசும்புற வீசுவ கண்ணுதல் பாற்
செலநின், கையில் வளர்த்த பசுங்கிளி யும்வளர்
காமர் கருங்குயிலும்,
பிள்ளைவெ ளோதிம மும்முறை முறையாற் பெரு
கிய காதலைமேற், பேச விடுப்ப கடுப்ப வணைத்
தொரு பெடையோ டரசவனம்,
அள்ளல் வயற்றுயின் மதுரைத் துரைமக ளாடுக வம்
மனையே, யழகு தழைந்தகல் யாண சவுந்தரி யா
டுக வம்மனையே. (௧0)

அம்மானைப்பருவம் முற்றிற்று.

நீ ரா ட ற் ப ரு வ ம்.

வளையாடு வண்கைப் பொலன்சங் கொடும்பொங்கு
மறிதிரைச் சங்கோ லிட, மதாரிக் கட்கயல் வரி
க்கய லொடும்புரள மகரந்த முண்டு வண்டின்,
கிளையாடு நின்றிருக் கேசபா சத்தினொடு கிளர்சை
வலக்கொத் தெழக், கிடையாத புதுவிருந் தெதிர்
கொண்டு தத்தமிற் கேளிர்க டழீஇக்கொண் டெ
னத்,
தளையாடு கறையடிச் சிறுகட் பெருங்கைத் தடக்களி
றெடுத்து மற்றத், தவளக் களிற்றினொடு முட்ட
விட் டெட்டுமத தந்தியும் பந்தடித்து,
விளையாடும் வைகைத் தடந்துறை குடைந்துபுது
வெள்ளநீ ராடி யருளே, விடைக்கொடி யவர்க்கொ
ரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ ராடி
யருளே. (௧)

நிரைபொங் கிடுஞ்செங்கை வெள்வளை கலிப்ப நகை
நிலவுவிரி பவளம் வெளிற, நீலக் கருங்குவளை
செங்குவளை பூப்பவற னெறிகுழற் கற்றை சரியத்,

திரைபொங்கு தண்ணந் துறைக்குடைந் தாடுவ செ
ழுந்தரங் கக்கங்கை நுண், சிறுதிவலை யாப்பொ
ங்கு மானந்த மாக்கட றிளைத்தாடு கின்ற தேய்ப்
பக்,

கரைபொங்கு மறிதிரைக் கையாற் றடம்பணைக்
கழனியிற் கன்னியர் முலைக், களபக் குழம்பைக்
கரைத்துவிட் டள்ளற் கருஞ்சேறு செஞ்சேற
தாய்,

விரைபொங் கிடத்துங்க வேகவதி பொங்குபுது
வெள்ளநீ ராடி யருளே, விடைக்கொடி யவர்க்
கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ
ராடி யருளே. (௨)

பண்ணுறு கிளிமொழிப் பாவைநின் றிருமேனி பா
சொளி விரிப்ப வந்தண், பவளக் கொடிக்காமர்
பச்சிளங் கொடியதாய்ப் பருமுத்த மரகதம
தாய்த்,

தண்ணுறு மல்லற் றுறைச்சிறை யனங்களி தழைக்
குங் கலா மஞ்ஞையாய்ச், சகலமுந் நின்றிருச் சொ
ருபமென் றோலிடுஞ் சதுமறைப் பொருள் வெளி
யிடக்,

கண்ணுறு குழலியர் குடக்கொங்கை பொங்குசெங்
களபமுங் கத்தூரி யுங், கர்ப்புரமு மொக்கக் கரை
த்தோடி வாணியுங் காளிந்தி யுங் கங்கையாம்,

விண்ணாறு மளவளாய் விளையாடு வைகைபுது வெள்ளநீ ராடி யருளே, விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ ராடி யருளே. (௩)

தூங்குசிறை யறுகா லுறங்குகுழ னின்றுணைத் தோழியர்கண் மேற் குங்குமந், தோயும் பனித்துறைச் சிவிறியி சக்குறுந் துளியெம் மருங்கு மோடி,

வாங்குமலை வில்லியார் விண்ணுரு நனைந்தவர் வனைந் திடு திகம்பரஞ் செவ், வண்ணமாச் செய்வதச் செவ்வான வண்ணரொடு மஞ்சள்விளை யாடலேய்ப்பத்,

தேங்குமலை யருவிநெடு நீத்தத்து மாசுணத் திரள் புறஞ் சுற்றி யீர்ப்பச், சினவேழ மொன்றொரு சுழிச்சுழல்வ மந்தரந் திரைக்கடன் மதித்தன் மானும்,

வீங்குபுனல் வைகைத் தடந்துறை குடைந்துபுது வெள்ளநீ ராடி யருளே, விடைக்கொடி யவர்க் கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ ராடி யருளே. (ச)

துளிக்கும் பனித்திவலை சிதறக் குடைந்தாடு துறையிற் றுறைத் தமிழொடுந், தொன்மறை தெளிக் கும் கலைக்கொடி யெனுந்துணைத் தோழிமூழ் கிப் புனன் மடுத்,

தொளிக்கும் பதத்துமற் றவளென வனப்பேடையோடிப் பிடிப்ப தம்மை, யொண்பரி புரத் தொனியு மடநடையும் வெளவின துணர்ந்துபின் றொடர்வ தேய்ப்ப,

நெளிக்குந் தரங்கத் தடங்கங்கை யுடனொட்டி நித்தி
லப் பந்தாடவு, நிரைமணித் திரளின் கழங்கா
டவுந்தன் னெடுந்திரைக் கை யெடுத்து,

விளிக்கும் பெருந்தண் டுறைக்கடவுள் வைகைநெடு
வெள்ளநீ ராடி யருளே, விடைக்கொடி யவர்க்
கொரு கயற்கொடி கொடுத்த கொடி வெள்ளநீ
ராடி யருளே. (ரு)

வேறு.

துங்க முலைப்பொற் குடங்கொண்டு தூநீர் நீந்தி விளை
யாடுந், துணைச்சே டியர்கண் மேற்பசும்பொற்
சுண்ண மெறிய வறச்சேந்த,

அங்கண் விசும்பி னின்குழற்காட் டறுகாற் சுரும்ப
ரெழுந்தார்ப்ப, வையன் றிருமே னியிலம்மை யரு
ட்கட் சுரும்பார்த் தெழுன்மானச்,

செங்க ணிளைஞர் களிக்காமத் தீமூண் டிடக்கண் டிள
மகளிர், செழுமென் குழற்கூட் டகிற்புகையாற்
றிரள்காய்க் கதலி பழுத்துநறை,

பொங்கு மதுரைப் பெருமாட்டி புதுநீ ராடி யருளு
கவே, பொருநைத் துறைவன் பொற்பாவாய் புது
நீ ராடி யருளுகவே. (சு)

இழியும் புனற்றண் டுறைமுன்றி லிதுவெம் பெரு
மான் மண்சுமந்த, விடமென் றலர்வெண் கமலப்
பெண் ணிசைப்பக் கசிந்துள் ளுருகியிரு,

விழியுஞ் சிவப்ப வானந்த வெள்ளம் பொழிந்து நின்
றனையான், மீண்டும் பெருக விடுத்தவற்கோர்
வேலை யிடுதன் மிகையன்றே,

பிழியு நறைக்கற் பகமலர்ந்த பிரச மலர்ப்பூந் துகண்
மூழ்கும், பிறைக்கோட் டயிரா வதங்கூந்தற் பிடி
யோ டாடத் தேனருவி,

பொழியும் பொழிற்கூ டலிற்பொலிவாய் புதுநீ ராடி
யருளுகவே, பொருநைத் துறைவன் பொற்பா
வாய் புதுநீராடி யருளுகவே. (எ)

மறிக்குந் திரைத்தண் புனல்வைகை வண்ட லிடுமண்
கூடைகட்டி, வாரிச் சுமந்தோர்க் கம்மைதுணை
மணிப்பொற் குடத்திற் கரைத்தூற்றும்,

வெறிக்குங் குமச்சே றெக்கரிடும் விரைப்பூந் துறை
மண் போலொருத்தி, வெண்பிட் டிடவு மடித்தொ
ருவன் வேலை கொளவும் வேண்டுமெனக்,

குறிக்கு மிடத்திற் றடந்தூநீர் குடையப் பெறினக்
கங்கைதிருக், கோடீ ரத்துக் குடியிருப்புங் கூடா
போலும் பொலன்குவட்டுப்,

பொறிக்குஞ் சுறவக் கொடியுயர்த்தாய் புதுநீ ராடி
யருளுகவே, பொருநைத் துறைவன் பொற்பா
வாய் புதுநீ ராடி யருளுகவே. (அ)

வேறு

சொற்கொடி யோடு மலர்க்கொடி கொய்து தொடுத்த
விரைத்தொடையும், சுந்தரி தீட்டிய சிந்துர மும்
மிரு துங்கக் கொங்கைகளின்,

விற்கொடி கோட்டிய குங்கும முங்குடை வெள்ளங்
கொள்ளைகொள, வெளியே கண்டுநின் வடிவழ
கையன் விழிக்கு விருந்துசெய,

விற்கொடி யோடு கயற்கொடி வீர னெடுத்த கருப்
புவிலு, மிந்திர தனுவும் வணங்க வணங்குமி
ணைப்புரு வக்கொடிசேர்,

பொற்கொடி யிமய மடக்கொடி வைகைப் புதுநீ
ராடுகவே, பொருநைத் துறையொடு குமரித் துறை
யவள் புதுநீ ராடுகவே. (௯)

கொள்ளைவெ ளருவி படிந்திடு மிமயக் கூந்தன் மடப்
பிடிபோற், கொற்கைத் துறையிற் சிறைவிரி யப்
புனல் குடையு மனப்பெடைபோல்,

தெள்ளமு தக்கட லடுவிற் றோன்று செழுங்கம லக்கு
யில்போல், தெய்வக் கங்கைத் திரையூ டெழு
மொரு செம்பவ ளக்கொடிபோல்,

கள்ளவிழ் கோதையர் குழலிற் குழலிசை கற்றுப்
பொற்றருவிற், களிநற வுண்ட மடப்பெடை
யோடு கலந்து முயங்கிவரிப்,

புள்ளுறை பூம்பொழின் மதுரைத் துரைமகள் புதுநீ
ராடுகவே, பொருநைத் துறையொடு குமரித் துறை
யவள் புதுநீ ராடுகவே. (௧௦)

நீராடற்பருவம் முற்றிற்று.

ஊசற் பருவம்.

ஒள்ளொளிய பவளக் கொழுங்கான் மிசைப்பொங்கு
மொழுகொளிய வயிர விட்டத், தூற்றுஞ் செழுந்
தண் ணிலாக்கால் விழுந்தனைய வொண்டரள
வடம் வீக்கியே,

அள்ளிட வழிந்துசெற் ஹெளிதுளும் புங்கிரண வரு
ண ரத்நப் பலகைபுக், காடுகின் ஹேற்றமப் பரிதி
மண் டலம்வள ரும்பெருஞ் சுடரை யேய்ப்பத்,

தெள்ளுசுவை யமுதங் கனிந்தவா னந்தத் திரைக்
கடன் மடுத் துழக்குஞ், செல்வச் செருக்கர்கண்
மனக்கமல நெக்கபூஞ் சேக்கையிற் பழைய பாடற்,

புள்ளொலி யெழக்குடி புகுந்தசுந் தரவல்லி பொன்
னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு
வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி யரு
ளே. (க)

விற்பொலிய நிலவுபொழி வெண்ணித் திலம்பூண்டு
விழுதுபட மழகதிர் விடும், வெண்டரள வூசலின்
மிசைப்பொலிவ புண்டரிக வீட்டிற் பொலிந்து
மதுரச்,

சொற்பொலி பழம்பாடல் சொல்லுகின் றவளுநின்
சொருபமென் பதுமிள நிலாத், தூற்றுமதி மண்ட
லத் தமுதமா யம்மைநீ தோன்றுகின் றதும்
விரிப்ப,

எற்பொலிய வொழுகுமுழு மாணிக்க மணிமுகப்
பேறிமழை முகி றவழ்வதவ், வெறிசுடர்க் கடவு
டிரு மடியிலவன் மடமக ளிருந்துவிளை யாட
லேய்க்கும்,

பொற்புரிசை மதுரா புரிப்பொலி திருப்பாவை
பொன்னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்
திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி
யருளே. (உ)

உருகிய பசும்பொன் னசும்பவெயில் வீசுபொன் னூ
சலை யுதைந் தாடலு, மொண்டளி ரடிச்சுவ டுறப்
பெறு மசோகுநற வொழுகுமலர் பூத் துதிர்வதுன்,

திருமுனுரு வங்கரந் தெந்தையார் நிற்பது தெரிந்
திட நமக் கிதுவெனுச், செஞ்சிலைக் கள்வனொரு
வன்றொடை மடக்காது தெரிகணைகள் சொரிவ
தேய்ப்ப,

எரிமணி குயின்றபொற் செய்குன்று மழகதி ரெறிப்
பவெழு செஞ் சோதியூ, டிளமதி யிமைப்பதுன்
றிருமுகச் செவ்விவேட் டெழுநாத் தலைத்தவ
மவன்,

புரிவது கடுக்குமது ராபுரி மடக்கிள்ளை பொன்னூச
லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகி
னுக் கொத்தகொடி பொன்னூச லாடி யருளே.(௩)

கங்கைமுடி மகிழ்நர்திரு வுளமசைந் தாடக் கலந்தாடு
பொன்னூச லக், கடவுடிரு நோக்கத்து நெக்குருகி
யிடநின் கடைக்கணோக் கத்து மற்றச்,

செங்கண்விடை யவர்மனமு மொக்கக் கரைந்துருகு
செய்கையவர் சித்த மேபொற், றிருவூச லாவிருந்
தாடுகின் றயெனுஞ் செய்தியை யெடுத் துரைப்ப,

அங்கணெடு நிலம்விடர் படக்கிழித் தோடுவே ரடி
யிற் பழுத்த பலவின், ளிபொற் சுளைக்குடக் கனி
யுடைந் தூற்றுதே னருவிபில மேழு முட்டிப்,

பொங்கிவழி பொழின்மதுர மதுரைநா யகிதிருப்
பொன்னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்
திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி
யருளே. (௪)

சேர்க்குஞ் சுவைப்பாட லமுதொழுக வொழுகு
பொற் றிருவூசல் பாடி யாடச், சிவபிரான் றிருமுடி
யசைப்பமுடி மேற்பொங்கு செங்கணா வரசகி
லம் வைத்,

தார்க்கும் பணுடவி யசைப்பச் சராசரமு மசைகின்ற
தம்மனை யசைந், தாடலா லண்டமு மகண்டபகி
ரண்டமு மசைந்தாடு கின்ற தேய்ப்பக்,

கார்க்கொந் தளக்கோதை மடவியர் குழற்கூட்டு
கமழ்நறும் புகைவிண் மிசைக், கைபரந் தெழுவ
துரு மாறிரவி மண்டலங் கைக்கொள விருட் பட
லம்வான்,

போர்க்கின்ற தொக்குமது ராபுரி மடக்கிள்ளை பொன்
னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு
வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி யரு
ளே. (ரு)

தேர்க்கோல மொடுநின் றிருக்கோல முங்கண்டு சிந்
தனை புழுங்கு கோபத், தீயவிய மூண்டெழுங் கா
மா னலங்கான்ற சிகையென வெழுந்து பொங்
குந்,

தார்க்கோல வேணியர்த முள்ளமென வேபொற்
றடஞ்சிலையு முருகி யோடத், தண்மதி முடித்த
தும் வெள்விடைக் கொண்மணி தரித்ததும்
விருத்த மாகக்,

கார்க்கோல நீலக் கருங்களத் தோடொருவர் செங்
களத் தேற்ற லமரக், கட்கணை துரக்குங் கரும்புரு
வ வில்லொடொரு கைவிற் குனித்து நின்ற,

போர்க்கோல மேதிரு மணக்கோல மானபெண்
பொன்னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்
திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி
யருளே. (௬)

குழியும் பசுங்கண் முசுக்கலை வெரீஇச்சிறு குறும்
பலவி னெடிய பாரக், கொம்பொடி படத்தூங்கு
முட்புறக் கனியின் குடங்கொண்டு நீந்த மடை
வாய்,

வழியுங் கொழுந்தே னுவட்டெழு தடங்காவின் வள்
ளுகிர்க் கரு விரற்கூன், மந்திக ளிருந்தேகும் விசை
யினில் விசைந்தெழு மரக்கோடு பாய வயிறு,

கிழியுங் கலைத்திங்க ளமுதருவி தூங்குவ கிளைத்து
வண் டுழுபைந் துழாய்க், கேசவன் கால்வீச வண்
டகோ ளகைமுகடு கீண்டுவெள் ளருவி பொங்
கிப்,

பொழியுந் திறத்தினை நிகர்க்குமது ரைத்தலைவி
பொன்னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்
திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி
யருளே. (௭)

ஒல்குங் கொடிச்சிறு மருங்கிற் கிரங்கிமெல் லோதி
வண் டார்த் தெழப்பொன், னூசலை யுதைந்தாடு
மளவின்மலர் மகளம்மை யுள்ளடிக் கூன் பிறைத
ழீஇ,

மல்குஞ் சுவட்டிணை வலம்புரிக் கீற்றிதுகொல் வாணி
யென் றசதி யாடி, மணிமுறுவல் கோட்டரின்
வணங்கா முடிக்கொரு வணக்கநெடு நாண் வழங்
கப்,

பில்குங் குறும்பனிக்கூதிர்க் குடைந்தெனப் பிரசநா
றைம்பாற் கிளம், பேதையர்களூட்டுங் கொழும்
புகை மடுத்துமென் பெடையொடு வரிச் சுரும்பர்,

புல்குந் தடம்பணை யுடுத்தமது ரைத்தலைவி பொன்
னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு
வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி
யருளே. (௮)

கொன்செய்த செழுமணித் திருவூச லரமகளிர் கொ
ண்டாட வாடுந் தொறுங், குறுமுறுவ னெடுநில
வருந்துஞ் சகோரமாய்க் கூந்தலங் கற்றை சுற்
றுந்,

தென்செய்த மழலைச் சுரும்பராய் மங்கைநின் செங்
கைப் பசுங் கிள்ளையாய்த், தேவதே வன்பொ
லிவ தெவ்வுருவு மாமவன் றிருவுருவின் முறை
தெரிப்ப,

மின்செய்த சாயலவர் மேற்றலத் தாடிய விரைப்புன
லி னருவி குடையும், வெள்ளானை குங்குமச் செஞ்
சேறு நாறமட மென்பிடியை யஞ்சி நிற்கும்,

பொன்செய்த மாடமலி கூடற் பெருஞ்செல்வி
பொன்னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்
திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி
யருளே. (௯)

இருபதமு மென்குரற் கிண்கிணியு முறையிட் டிரைத்
திடு மரிச் சிலம்பு, மிறுமிறு மருங்கென் றிரங்
குமே கலையும்பொ னெழுதுசெம் பட்டு வீக்
குங்,

திருவிடையு முடைதார மும்மொட்டி யாணமுஞ்
செங்கைப் பசுங் கிள்ளையுந், திருமுலைத் தாளவுத்
தரியமும் மங்கலத் திருநாணு மழகொழுக நின்,

றருள்பொழியு மதிமுகமு முகமதியி னெடுநில வரும்
புகுறு நகையு ஞான, வானந்த மாக்கடல் குடைந்
துகுழை மகரத்தொ டமராடு மோட ரிக்கட்,

பொருகயலும் வடிவழகு பூத்தசுந் தரவல்லி பொன்
னூச லாடி யருளே, புழுகுநெய்ச் சொக்கர்
திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடி
யருளே. (௧0)

ஊசற்பருவம் முற்றிற்று.

ஆகூ பருவம் பத்துக்குத் திருவிருத்தம் ௧0௨.

மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்

முற்றிற்று.

ADIGAL